## ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனம் - 2014

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிபுக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவனத்தை தாபித்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு III இன் பிரகாரம் ஊக்க பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனம் 2013 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 09 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை வழங்குகையில் பாவிக்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்காக, பொருட்கள் அல்லது வழங்கும் தன்மையில் உள்ளவைகள் இருப்பாக இனங்காணப்பட வேண்டிய போதும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தில் எஞ்சியிருந்த பெறுமதி ரூபா 1,105,927 ஆன 188 மாதிரி ஒன்றுதிரட்டும் தொகுதிகள் (Sample Kit) இருப்பாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் முதலாம் வருடத்திற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் மிகை ரூபா 110,540 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் ஐஐ ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்.

(i) விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டை ஒழிப்பதற்கு தேவையான சில நடவடிக்கைகள் எடுத்தல்.

(ii) விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் விதிகளை உருவாக்கி அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் அப் பரிசோதனை மேற்கொள்ளல், தண்டனை வழங்குதல் மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் இது வரை நடவடிக்கை எடுத்து இருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.2 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்கு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள், 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் படி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் திட்டம்

--------------------------------

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

.ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் ஒட்டுமொத்த பாதீட்டு ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் போது 34 சதவீதம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 24 ஏற்பாட்டு செலவின விடயங்களின் 15 ஆன 80 சதவீதத்திற்கும் அதிகமான சேமிப்பொன்றும் 10 விடயங்களின் 100 சதவீத ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது, மேலும், 03 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டிலான சேமிப்பு 70 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவாக காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைக்களுக்கான ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.